ஏற்பட்ட நாளிலிருந்து, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகுதான் ஒவ்வொரு ஆண்டும் 5 புதிய அலுவலகங்களைத் திறந்துகொண்டிருக்கிறோம். கடந்த ஆண்டு 5, அதற்கு முந்தைய ஆண்டு 5 என்று புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வருடந்தோறும் 3 R.T.O. அலுவலகங்களுக்கும், 5 யூனிட் அலுவலகங்களுக்கும் கட்டடங்கள் கட்டப்பட்டுக்கொண்டு வருகின்றன. தொடர்ந்து அத்தூர் பகுதியின் தேவையை அறிந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அதற்கும்' முன்னுரிமை வழங்கலாம்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

கட்டட வசதி

***18819—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் சார் பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கான கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2007 அக்டோபர் 22]

திரு. வை. காவேரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகுடஞ்சாவடியில் சார் பதிவாளர் அலுவலகம் 4–5–1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த அலுவலகம் 4–5–1970 முதல் 30–4–1988 வரை தொடர் வண்டித் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்தது 1–5–1988 முதல் இன்றுவரை வாடகைக் கட்டடத்தின் மேல் மாடியில் இயங்கி வருகின்றது. இந்தக் கட்டடத்திற்கு மாதம் ஒன்றுக்கு வாடகை ரூ.2,100 கொடுக்கப்படுகிறது. இந்தச் சார் பதிவாளர் அலுவலகத்தில் 27 கிராமங்களுக்குச் சொந்தமான நிலங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இந்தச் சார் பதிவாளர் அலுவலகத்தினால் அரசுக்கு வரக்கூடிய வருமானம், முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணமாக 2004 ஆம் ஆண்டு மட்டும் 1,67,35,972 ரூபாயும், 2005 ஆம் ஆண்டு 1,96,16,332 ரூபாயும், 2006 ஆம் ஆண்டு 2,42,91,385 ரூபாயும், இந்த ஆண்டு 2007 ஆம் ஆண்டு இதுவரை மூன்றரை கோடி ரூபாய்க்கு மேலாகவும் வருமானம் இருக்கின்றது. இவ்வளவு வருமானம் இருக்கின்ற இந்தச் சார் பதிவாளர் அலுவலகம் பாதை வசதி சரியாக இல்லாத ஓர் இடத்தில் இயங்குகின்ற காரணத்தினால் அங்கே பதிவு செய்ய வருகின்றவர்கள் வாகனங்களை நிறுத்துவதற்கு இட வசதி இல்லை. அப்படி வாகனங்களை நிறுத்தினாலும், அந்தப் பகுதியில் யாரும் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. உழைப்பவர்களுக்கு உரிய. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மாத்திரம் கேளுங்கள். (குறுக்கீடு) பெரிய debate நடத்தாதீர்கள். கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

திரு. வை. காவேரி: இவ்வளவு வருமானம் இருக்கிற இந்தச் சார் பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் இல்லை என்று அறிவிப்பு வருகின்றபோது நான் என்ன மாற்றாந்தாய்ப் பிள்ளையா என்று நினைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகின்றது. ஆகவே, கட்டாயம் அமைச்சர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய

கோரிக்கையை விளம்பரப்படுத்துவதற்காகவே இந்த நேரத்தில் கேட்கின்றார் என்று நினைக்கின்றேன். அது வேண்டுமென்று கேட்டிருந்தால், கடந்த ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தலைவர் கலைஞர் அவர்கள் 15 கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியினை அளித்தார்கள். இந்த ஆண்டு 20 சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய இடத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கு நிதியை ஒதுக்கித் தந்தார்கள். அப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கையை வைத்திருந்தால் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே நாங்கள் பரிசீலித்து இருப்போம். இப்போது நிதியில்லாத காரணத்தாலே வருகிற ஆண்டுகளில், தேவைக்கேற்ப, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. காவேரி.

திரு. வை. காவேரி: வரும் ஆண்டில் செய்து கொடுப்பேன் என்று உறுதி கொடுத்த அமைச்சருக்கு நன்றி கூறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சின்னசாமி.

திரு. அ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டு தொகுதி, பேரணாம்பட்டில் துணைப் பதிவாளர் அலுவலகம் நீண்ட நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அங்கே புதிதாக கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா? அமைச்சர் அவர்கள் அங்கே புதிய கட்டடம் கட்ட ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, வருகின்ற நிதிநிலை அறிக்கையில் தலைவர் கலைஞருடைய தாராள மனப்பான்மையைக் கணக்கில்கொண்டு கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜெயபால், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.